දුරකථන
தொலைபேசி
Telephone
) 0112669192 , 0112675011
) 0112698507 , 0112694033
) 0112675449 , 0112675280

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
) 0112693866
) 0112693869
)0112692913

විද්‍යුත් තැපෑල
மின்னஞ்சல் முகவரி
e-mail
)postmaster@health.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
website
) www.health.gov.lk

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය
எனது இல
My No.
) CF/EXV/03/2021

ඔබේ අංකය
உமது இல
Your No. :
)

දිනය
திகதி
Date
) 2021/07/16

# සෞඛ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதாரம் அமைச்சு
# Ministry of Health

பொதுச் சுற்று நிருப கடித இல: 02-58/2021

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
உரிய திணைக்களத் தலைவர்களும்.

**சுகாதாரம் அமைச்சில் ஆரம்ப தொழிநுட்ப சேவை வகையின் தரம் I (PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான கட்டுபாட்டு அறை இயக்குனர், மோட்டார் வாகன தொழிநுட்பவியலாளர், மின்னியலாளர் மற்றும் சினிமா இயந்திர இயக்குனர் பதவிகளுக்கான மூன்றாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2021**

சுகாதாரம் அஅமைச்சின் ஆரம்ப தொழிநுட்ப சேவை வகையின் (PL-03 – 2006) (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான கட்டுபாட்டு அறை இயக்குனர், மோட்டார் வாகன தொழிநுட்பவியலாளர், மின்னியலாளர், சினிமா இயந்திர இயக்குனர் மற்றும் மின் மருத்துவ இயந்திரவியலாளர் பதவிகளின் பொருட்டு தரம் I இற்கு ஆட்சேர்க்கப்பட்டு 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தி பெற வேண்டிய இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது ஆம் திகதி சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பரீயட்சை நடைபெறும் திகதி, இடம், நேரம் என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்படும்.

02. **தகைமைகள் :-**

சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சில் ஆரம்ப தொழிநுட்ப சேவை வகையின் (PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான (கட்டுபாட்டு அறை இயக்குனர், மோட்டார் வாகன தொழி நுட்பவியலாளர், மின்னியலாளர் மற்றும் சினிமா இயந்திர இயக்குனர்) பதவிகளில் தரம் I ற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், இதுவரை இப் பரீட்சையில் சித்தியடையாத அலுவலர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் : -**

**சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரது 02-90/2015 இலக்க, 2015.08.12ம் திகதிய பொதுச் சுற்றுநிருப இலக்க கடித்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2012.07.27 ம் திகதி மின்னியலாளர், சினிமா இயந்திர இயக்குனர் போன்ற பதவிகளில் தரம் - I இல் 05 வருடங்களை கடந்துள்ள உத்தியோகத்தர்கள் இந்த வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் இப்பரீட்சையின் பொருட்டு தோற்ற வேண்டிய அவசியமில்லை.**

**விண்ணப்பம் கிடைக்கப்பெறும் கடைசி தினமான 2021/08/15 ம் திகதியுடன் I ம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

03. விண்ணப்பங்கள் :-

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய", இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு **2021/08/15** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9 x 4 அங்குல அளவுடைய கடிதஉறைகள் 02 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகத்திக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

**விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 03 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 04 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.**

04. பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

05. பரீட்சையின் பொருட்டு உட்பத்திக் கொள்ளுதல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவிலுள்ள கடவுச் சீட்டு

06. பரீட்சை நடைமுறை

இப் பரீட்சையானது பதவிக்கு உரியதான விடயப்பரப்பு தொடர்பான கட்டுரை வினாத்தாள் ஒன்றினைக் கொண்டது. நேரம் 1மணி 30 நிமிடங்கள். இவ் வினாத்தாள் ஆனது 06 வினாக்களை கொண்டுள்ளது. இதில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப்புள்ளிகள் 100. சித்தியடைவதன் பொருட்டு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளை பெற்றுக்கொள் வேண்டும்.

07. பரீட்சை பாடத்திட்டம்

பதவிக்கு உரியதான விடயப்பரப்பு தொடர்பான கட்டுரை வினாத்தாள்

பதவிக்கு உரிய விடயப்பரப்பு தொடர்பான அறிவு, வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான வியட அறிவு.

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனத்தில் உள்ள சகல சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் ஆரம்ப தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவின் (PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான சகல அலுவலர்களுக்கும் அறியப்படுத்துவதற்கு ஒழுங்கினை மேற்கொள்ளவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

**கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்று நிருபங்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள மொழிமூல சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

ஷாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளரின் பொருட்டு
சுகாதாரம் அமைச்சு

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

**EXV**

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சில் ஆரம்ப தொழிநுட்ப சேவை வகையின் தரம் I (PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான கட்டுபாட்டு அறை இயக்குனர், மோட்டார் வாகன தொழிநுட்பவியலாளர், மின்னியலாளர் மற்றும் சினிமா இயந்திர இயக்குனர் பதவிகளுக்கான மூன்றாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2021 (1ஆம் தடவை)**

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்): ………………………………………………

………………………………………………………………………………

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( ஆங்கில கப்பிற்றல் எழுத்தில்):

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துடன் பெயர் : (தமிழில்): ………………………………………………

………………………………………………………………………………

(iv) முதல் எழுத்துடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் I ற்கு நியமிக்கப்பட்ட / உயர்வு பெற்ற கடித இல மற்றும் திகதி:………………………

(ii) 2012.07.27 ம் திகதியன்று தரம் I ல் சேவைக்காலம்:………………………………………

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம்: ………………………………………………

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(v) தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

**02.** (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம்:

(தமிழில்)………………………………………………………………………………

(ஆங்கிலத்தில்)…………………………………………………………………………

(ஆ) உரிய மாவட்டம் : ………………………………………………………………

(இ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் ☐

- மாகாணசபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் அதற்குரிய மாகாணம் : ………………………………………………

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9” x 4” அளவு ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 02 இணைக்கப்பட்டு உள்ளதா? ………………………………………………

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்): ………………………………………………………

(ii) தபால் முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): ……………………………………

**03.** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ……………………………………

(ஆ) முதற் தடவை விண்ணப்பிப்பதில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ……………………………………

| முத்திரைக் கூண்டு |
| --- |

**05. விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா…………….. பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும்* இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதாரம் மற்றும் சுதேச சேவைகள் வைத்திய அமைச்சு பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி :………………………… ………………………………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

**06. தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் உறுதியுரை**

இந்த விணணப்பம் விண்ணப்பம் பாரமேற்கப்படும் தினத்திற்கு முன்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணபதாரி இந்த விண்ணபத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ணபத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………………………

திகதி : பெயர், கையொப்பம்

**07. நிறுவனத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி/செல்வன்* ……………………………………….. என்பவர்……………………………

உத்தியோகத்தராக இந்த நிறுவனத்தில் பணிபுரிகின்றார். ஏன்றும் அவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை என்பதால் /முதன் முறை அல்ல என்பதால்* ரூபா ……….. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணபத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணபதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:………………………….. ………………………………………………

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

**08. பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட இயக்கத்தலைவரின் உறுதிப்படுத்தல்.**

திரு/திருமதி/செல்வி/செல்வன்* ……………………………………… என்பவர் எனது நிறுவனத்தில் ………………………………… உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்றும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணபதாரியின் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரியதகைமைகளினை இவர் பூத்திசெய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:…………………………… ……………………………………………………

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்)

* - பொருத்தமற்றதை வெட்டிவிடவும்